NATIONAL SENIOR CERTIFICATE EXAMINATION
MAY 2021

TAMIL SECOND ADDITIONAL LANGUAGE: PAPER I

Time: 2 hours 100 marks

PLEASE READ THE FOLLOWING INSTRUCTIONS CAREFULLY

1. This question paper consists of 7 pages. Please check that your question paper is complete.
2. Read the instructions to each question carefully.
3. Answer all questions taking note of any choices given.
4. Number your answers exactly as the questions are numbered.
5. All answers must be in TAMIL.
6. It is in your own interest to write legibly and to present your work neatly.

IEB Copyright © 2021

SECTION A

QUESTION 1 பகுதி ஒன்று

கீழ்வரும் கதையை நன்றாகப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக

வள்ளலார் வாழ்வும் வாக்கும்

பொருளை வாரிவழங்கும் வள்ளல்கள் பலர். ஆனால் உயிர்களிடம் அருளை வாரி வழங்கும் வள்ளல்கள் சிலர். அவர்களுள் மிகச்சிறந்தவர் நாம் பாடிமிகழும் திருவருட்பாவை இயற்றிய இராமலிங்க அடிகள்.

இராமலிங்க அடிகள், தமிழ்நாட்டில், சிதம்பரத்திற்குப் பக்கத்திலுள்ள மருதூரில் பிறந்தவர். இவர் தந்தையார் இராமையாப்பிள்ளை; தாயார் சின்னம்மையார்.

இராமலிங்கர், இளமைக்காலத்தில் பெற்றோரை இழந்தார். அதனால், அவர் அண்ணன் சபாபதிப்பிள்ளை அவர்களால் வளர்க்கப்பட்டார். சென்னை, திருவெற்றியூர், சிதம்பரம், கருங்குழி, வடலூர் முதலான பல ஊர்களில் வாழ்ந்தார்.

அடிகள், பொருளாசை அற்றவராக விளங்கினார். ஏழை பண்க்காரர், மேல்சாதி – கீழ்சாதி முறைகளை ஏதிர்த்தார்

வள்ளலார் இளமையில் முருகனை வழிபட்டார். பிறகு சிவபெருமானையும் நடராசரையும் வழிபட்டார். பின்னர் கடவுள் ஒருவரே என்ற கொள்கையைப் பரப்பினார். சன்மார்க்க நேறி (தூய்மையான நல்வழி) என்னும் நெறியைத் தோற்றுவித்தார். அதுவே, இறையை அடையும் வழி எனக் கூறினார்.

"உயிர்ப்பலி கூடாது; புலால் உண்ணக் கூடாது; எல்லா உயிர்களையும் தம் உயிர்போல் எண்ணி இரக்கம் கொள்ள வேண்டும்" என்பன, வள்ளலார் கொள்கைகள். வள்ளலார் பாடிய, பாடல்களின் தொகுப்பு 'திருவருட்பா' என வழங்கப்படுகிறது. திருவருட்பா ஆறுபகுதிகளைக் கொண்டது; 5818 பாடல்களைக் கொண்டது.

மேலும், 'மனு முறை கண்ட வாசகம்' 'ஜீவகாருண்ய ஒழுக்கம்' முதலான உரைநடை நூல்களையும் வள்ளலார் இயற்றியுள்ளார்.

வள்ளலார் தம் இறுதிக்காலத்தில் வடலூரில் வாழ்ந்து வந்தார். அங்கு சத்திய ஞானசபையை நிறுவினார். வருவோருக்கெல்லாம் பசியாற உணவு வழ்ங்கினார். அன்று வள்ளலார் அங்கு மூட்டிய அடுப்பு இன்றும் எரிந்து கொண்டிருக்கிறது; பசிப்பிணி அகற்றி வருகிறது.

IEB Copyright © 2021

வள்ளலார், 1874 ஆம் ஆண்டு, தம் 51 ஆவது வயதில், வடலூர் சித்திவிளாகத்தில், இறைவனோடு இரண்டறக் கலந்தார். வள்ளலாரின் கொள்கைகள் உலகம் முழுவதும் பரவிவருகிறது. வள்ளல் இராமலிங்க அடிகள், மக்களின் அறியாமை கண்டுவாடினார்; சமுதாயக் குறைகளை கண்டு சாடினார்; அவற்றைப் போக்க இறைவன் திருவருளைத் தேடினார்; திருவருட்பாப் பாடினார். இவையே, வள்ளலார் பற்றிய தமிழ்ச் சான்றோர் கருத்துகளாகும்.

1.1 கோடிட்ட இடங்களை நிரப்புக

1.1.1 பொருளை _____ வள்ளல்கள் பலர் (1)

1.1.2 _____, இளமைக்காலத்தில் பெற்றோரை இழந்தார் (1)

1.1.3 ஏழை பணக்கார், மேல்சாதி – கீழ்சாதி முறைகளை _____ (1)

1.1.4 இறையை _____ வழி எனக்கூறினார் (1)

1.1.5 திருவருட்பா ஆறுபகுதிகளைக் கொண்டது; _____ _____ கொண்டது (1)

1.1.6 அங்கு சத்திய _____ நிறுவினார் (1)

1.2 சரியான விடை தருக

1.2.1 இராமலிங்க அடிகளார் எங்கு பிறந்தார்? (2)

1.2.2 எந்த காலத்தில் இராமலிங்கர் பெற்றோரை இழந்தார்? (2)

1.2.3 அவரை எந்த முறைகளை எதிர்த்தார்? (2)

1.2.4 வள்ளலார் இளமையில் யார் வழிப்பட்டார்? (2)

1.2.5 வள்ளலாரின் கொள்கைகள் யாவை? (2)

1.2.6 வள்ளலார் பாடிய பாடல்கள் எந்த நூலின் வழங்கப்படுகிறது? (2)

1.3 எது **சரி** எது **தவறு** எனக்கூறுக

1.3.1 இவர் தந்தையார் இராமையாப்பிள்ளை, தாயார் சின்னம்மையார் (1)

1.3.2 வள்ளலார் முதுமையில் முருகனை வழிபட்டார் (1)

1.3.3 அது வே, இறையை அடையும் வழி எனக்கூறினர் (1)

1.3.4 திருவருட்பா எழுபகுதிகளை கொண்டது? (1)

1.3.5 வருவோருக்கெல்லாம் பசியாற உணவு வழங்கினார் (1)

1.4 ஒருமைக்கு பன்மை தருக எ.கா: புலி – புலிகள்

1.4.1 பிறந்தவர் (1)

1.4.2 நீ (1)

1.4.3 நாள் (1)

IEB Copyright © 2021

1.4.4 நூல் (1)

1.4.5 பாடல் (1)

1.4.6 உணவு (1)

1.4.7 பூ (1)

1.4.8 சிறுவன் (1)

1.5 எதிர்ச்சொல் தருக எ.கா: வா – போ

1.5.1 பலர் (1)

1.5.2 அது (1)

1.5.3 இன்பம் (1)

1.5.4 முதல் (1)

1.5.5 அப்பெண் (1)

1.5.6 காலை (1)

1.6 கீழ்வரும் பகுதியைப் படித்துப் பின்வரும் கேள்விகளுக்குச் சரியான விடை எழுதுக

மக்கள் வளமாக வாழ்ந்தார்கள். நாட்டு மக்கள் எல்லாரும் அரசனின் மீது மிகுந்த மதிப்பு வைத்திருந்தார்கள்.
அந்த நாட்டின் நடுவில் ஒரு கிணறு இருந்தது அந்த நீர், சுவையாகவும், தெளிவாகவும் இருந்தது. வேறு கிணறு ஏதும் இல்லாததால் மக்கள் எல்லாரும் அந்தக் கிண்ற்று நீரையே குடித்து வந்தார்கள்.
ஒருநாள் சூனியக்காரி ஒருத்தி அந்தக் கிணற்றருகே வந்தாள். தன் கையிலிருந்த மந்திர நீரை அந்தக் கிணற்றில் கொட்டினாள். "இனி இந்த நீரை யார் குடித்தாலிம் பைத்தியம் ஆவார்கள்" என்று கூறிவிட்டு மகிழ்ச்சியுடன் அங்கிருந்து சென்றனர்.
மறுநாள் நாட்டு மக்கள் எல்லோரும் அந்தக் கிணற்று நீரைக் குடித்து பைத்தியம் ஆனார்கள். இதை அறிந்த அரசனும், அமைச்சனும், அந்த நீரைக் குடிக்காமல் இருந்தார்கள்

1.6.1 பெயர்ச்சொல் என்றால் என்ன? (2)

1.6.2 மேற்காணும்ன்பகுதியிலிருந்து நான்கு (4) பெயர்ச்சொற்களை எழுதுக (4)

1.6.3 வினைச்சொல் என்றால் என்ன? (1)

1.6.4 மேற்காணும் பகுதியிலிருந்து இரண்டு (2) வினைச்சொற்கள் எழுதுக (2)

1.6.5 இரண்டு (2) வினா எழுத்துக்கள் எழுதுக (2)

IEB Copyright © 2021

1.7 பிரித்து எழுதுக

1.7.1 வாழைக்காய் (1)

1.7.2 மனப்பாடம் (1)

1.7.3 அந்தப்பேனா (1)

1.7.4 என்பவரைப்பார் (1)

1.7.5 காட்டுப்பூக்கள் (1)

1.8 ஆண்பாலுக்கு பெண்பால் எழுதுக எ.கா: தந்தை – தாய்

1.8.1 அவன் (1)

1.8.2 மகன் (1)

1.8.3 நடிகன் (1)

1.8.4 மாமன் (1)

1.8.5 தலைவன் (1)

1.9 சரியாக எழுதுக

1.9.1 அவன் பள்ளி சென்றான் (1)

1.9.2 என் பாட்டி வீடு வந்தார் (1)

60 marks

IEB Copyright © 2021

SECTION B

QUESTION 2 பகுதி இரண்டு

கொன்றை வேந்தன்

2.1 கீழ்வரும் கதைகளில் ஏதேனும் ஒரு கதையை எழுதுக: -

2.1.1 ஒரு காலத்தில் இரு நண்பர்கள் _____

அல்லது

2.1.2 ஒரு நரி நடந்து வந்தது _____ (6)

2.2 சரியான சொற்களால் முடிவு செய்க: -

2.2.1 அன்னையும் பிதாவும் _____ (2)

2.2.2 _____ நல்லறம் அன்று (2)

2.2.3 _____ தீயார் கொள்வர் (2)

2.2.4 ஊருடன் பகைக்கின் _____ (2)

2.2.5 _____ வெட்டென மற (2)

2.3 திருக்குறள்

2.3.1 திருவள்ளுவரைப் பற்றி சுமார் 4–5 வரிகளை எழுதுக (4)

2.3.2 கொடுக்கப் பட்டுள்ள பகுதிகளை பயன்படுத்திக் கீழ்வரும் குறள்களை முடிவு செய்க

2.3.2.1 அகர முதல எழுத்தெல்வாம் _____ (2)

2.3.2.2 _____ நிலமிசை நீடுவாழ்வார் (2)

2.3.2.3 பொறிவாயில் ஐந்தவித்தான் பொய்தீர் _____ (2)

2.3.2.4 _____ கனி இருப்பக் காய் கவர்ந் தற்று (2)

[இனிய உளவாக இன்னாத கூறல் ; ஒழுக்க நெறி நின்றார் நீடுவாழ் வார் ; ஆதி பகவன் முதற்றே உலகு ; மலர்மிசை ஏகினான் மாணடி சேர்ந்தார்]

[28]

IEB Copyright © 2021

QUESTION 3 பகுதி மூன்று

கவிதை: பாப்பாப் பாட்டு

இப்பகுதியைப் படித்துக், கேள்விகளுக்குச் சரியான விடைதருக:

கொத்தித் திரியும் அந்தக் கோழி – அதைக்
கூட்டி விளையாடு பாப்பா
எத்தித் திருடும் அந்தக் காக்காய் – அதற்கு
இரக்கப் படவேணும் பாப்பா
பாலைப் பொழிந்துதரும் பாப்பா – அந்தப்
பசுமிக நல்லதடி பாப்பா
வாலைக் குழைத்துவரு நாய்தான் – அது
மனிதர்க்குத் தோழனடி பாப்பா
வண்டி இழுக்கும் நல்லகுதிரை – நெல்லு
வயலில் உழுதுவரும் மாடு
அண்டிப் பிழைக்கும் நம்மை ஆடு – இவை
ஆதரிக்க வேணுமடி பாப்பா

கேள்விகளுக்கு விடை தருக

3.1 பாப்பா பாட்டை எழதியவர் யார்? (2)

3.2 எது மனிதர்க்குத் தோழன்? (2)

3.3 பாட்டிலிருந்து மூன்று விலங்குகளின் பெயர்களை எழுதுக (3)

3.4 பாட்டிலிருந்து மூன்று பறவைகளின் பெயர்களை எழுதுக (3)

3.5 பாப்பாவிடம் எந்தெந்த தீமைகள் இருக்க கூடாது (2)

[12]

40 marks

Total: 100 marks

IEB Copyright © 2021